


<u>செய்தி வெளியீடு</u>

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் –ஆடி மாதத்தில் ஆன்மீகச் சுற்றுலா ஏற்பாடு – தமிழகத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களில் உள்ள 108 அம்மன் கோயில்களை தரிசிக்கச் செல்லும் சுற்றுலா பயணிகளை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திருமதி எஸ். கோகுல இந்திரா அவர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.**

1. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆடி மாதத்தில் ஆன்மீகச் சுற்றுலாப்பயணிகள் அம்மனை எளிதில் தரிசிக்கும் வகையில் 108 அம்மன் கோவில் சுற்றுலாவினை வருடம் முதல் தொடர்ந்து நடத்தி வருகிறது.

2. இவ்வருடம் ஆடி மாதத்தில் ஒவ்வொரு திங்கள் மற்றும் வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு புறப்பட்டு அதனையடுத்து வரும் வெள்ளி மற்றும் திங்கட்கிழமை இரவு மீண்டும் சென்னை வந்தடையும் வகையில் 5 நாட்கள் சுற்றுலா திட்டத்தினை நடத்துகிறது.

3. இச்சுற்றுலாவில் சென்னை, காஞ்சிபுரம், கடலூார், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்கள் மற்றும் புதுக்சேரியில் உள்ள 108 அம்மன் கோயில்களுக்கு சுற்றுலாப்பயணிகள் அழைத்துச்செல்லப்படுவர். இதற்கான கட்டணம் பெரியவர்களுக்கு ரூ.3,250/– . குழந்தைகளுக்கு 4 வயது முதல் 10 வயது வரை ரூ.2500/– ஆகும். இக்கட்டணத்தில் போக்குவரத்து, தங்கும் வசதி, வழிகாட்டியின் சேவை ஆகியவை அடங்கும்.

4. 18–7–2011 (திங்கட்கிழமை) அன்று காலை 06.00 மணிக்கு சென்னை வாலாஜா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக வளாகத்திலிருந்து தொடங்கும் முதல் சுற்றுலாவினை **மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திருமதி எஸ். கோகுல இந்திரா** அவர்கள் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்கள். திரு ஆ.சி. மோகன்தாஸ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தார்கள்.